### அ.தி.மு.க. தொண்டர்கள் தங்களது தலைமை சரியில்லை என உணரத் தொடங்கி விட்டனர்!

# ஈரோடு இடைத் தேர்தலில் தி.மு.க.விற்கு வாக்களித்த அ.தி.மு.க.வினர்!

## புதுக்கோட்டையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை பிப்.17 -

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட கீழ மூன்றாம் வீதியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள சிறுபான்மை யினர் நல கல்லூரி மாணவர் விடுதியினை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இதன் பின்னர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலுவலகம் வளாக கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினர். இதில் மாவட்ட ஆட்சியர் அருணா மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சட்டத்துறை அமைச்சர்எஸ்.ரகுபதிகூறுகையில்:

அண்ணா அறிவாலைய செங்கலை அகற்றுவேன் என்று அண்ணாமலையின் பேச்சு இதைப் போல முட்டாள்தனமான பேச்சு இருக்க முடியாது.

எங்களைத் தொடக்கூட முடியாது. அண்ணா அறிவாலயத்தில் நுழையக் கூட முடியாது. அண்ணா அறிவாலயம் சட்டப்படி முறைப்படி நன்றாக கட்டப்பட்டுள்ளது. அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது. அண்ணாமலை அல்ல அவரது தாத்தாவே வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. இது அவருக்கும் நன்றாகத் தெரியும். அங்குள்ள செங்கலை அல்ல சிறு புல்லைக் கூட புடுங்குவதற்கு வாய்ப்பு கிடையாது. நாங்கள் அனுமதித்தால் தான் அவர் உள்ளே வர முடியும்.

**விஜய்க்கு பா.ஜ.க. வலை!**

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்க்கு ஒய்பிரிவு பாதுகாப்பு வழங்கியதில் மாநில அரசை ஒன்றிய அரசு ஆலோசனை செய்ய வேண்டும் என்று அவசியம் கிடையாது. இது சோதனைக்காகவா? அங்கு யார் யார் வருகிறார்கள் என்று பார்ப்பதற்காகவா? அந்த மீனை தங்களுடைய வலையில் சிக்க வைப்பதற்காகவா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

**அ.தி.மு.க.வினர் மனமாற்றம்!**

அ.தி.மு.க.வில் உள்ள தொண்டர்கள் இரட்டை இலை சின்னத்தை தவிர வேறு எந்த சின்னத்திற்கும் வாக்களிக்க மாட்டார்கள். ஆனால் தற்பொழுது நடந்து முடிந்த ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் அதிமுக தொண்டன் முதல் முறையாக உதய சூரியனுக்கு வாக்களித்துள்ளார்கள். அ.தி.மு.க. தொண்டரிடம் மனமாற்றம் வந்துள்ளது. அந்த மன மாற்றத்தை நாங்கள் வரவேற்கின்றோம். அதிமுக தொண்டர்கள் அவர்களது தலைமை சரியில்லை என்பதை உணர தொடங்கிவிட்டனர்.

நாம் தமிழர் கட்சி தனியாகத் தான் தேர்தலைத் சந்திக்கப் போகிறது என்று கூறுகிறார்கள். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தனியாக அவர்கள் தேர்தலை சந்தித்து 234 தொகுதியிலும் டெபாசிட் இழந்த கட்சியாக இருக்கும்.



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நகைகளையும் அவரின் பேரில் உள்ள சொத்துக்களையும் முறைப்படி தமிழ்நாடு அரசுடைய லஞ்ச ஒழிப்புத்துறையிடம் ஒப்படைத்துள்ளது. இதற்கு அடுத்த கட்ட நடவடிக்கையாக அரசின் உடைய பதிலையும் நீதிமன்ற உத்தரவையும் பொறுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மயிலாடுதுறை சம்பவத்தில் யார்உண்மையானகுற்றவாளியோ அவர்களைப் பிடித்து நாங்கள் கைது செய்கின்றோம். எந்தச் சூழ்நிலையிலும் தவறான நபர்கள் கைது செய்துவிடக்கூடாது என்பதுதான் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவு. அண்ணாமலை சொல்வதற்கெல்லாம் நாங்கள் ஆட முடியாது. ஒரு சம்பவம் நடப்பது என்பது இயற்கை, அதனை நாங்கள் தடுக்க முடியாது.

ஆனால் ஒரு சம்பவம் நடந்த பிறகு அந்தக் குற்ற செயலில் ஈடுபடுபவர்களை நாங்கள் கண்டுபிடிக்கிறோமா இல்லையா என்பது தான் முக்கியம்.

இந்த சம்பவத்தில் குற்றவாளிகளை உடனடியாக கண்டுபிடித்துள்ளோம். இதன் பிறகு நீதிமன்றத்தில்அவர்கள்மீதுசுமத்தப்பட்ட குற்றத்தை நாங்கள் நிரூபிப்போம்.

**எங்களின் பார்வை மக்கள் மீதுதான்!**

மக்களின் பார்வை எப்படி இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் எங்களின் பார்வை மக்கள் மீது இருக்கிறது . மக்களுக்காக இருக்கிறது. இன்று இந்தியாக் கூட்டணிக்கு என்று தமிழ்நாட்டில் 52 சதவீதம் வாக்கு வங்கி இருப்பதாக கருத்துக் கணிப்பு கூறியுள்ளது. அதிமுகவுக்கு 20 சதவீதம் வாக்கு வங்கி தான் உள்ளது என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதுதானே தவிர வேறொன்றும் கிடையாது.

இரட்டை இலை சின்னத்தை தேர்தல் ஆணையமே விசாரிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு கொடுத்திருப்பதன் மூலமாக அதிமுக சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கிறது என்பது உண்மை.

**வலுவாக இருக்கும் ஒரே இயக்கம் தி.மு.க.!**

தி.மு.க. களத்தில் வலுவாக இருக்கக்கூடிய கட்சி. எங்களது கட்டமைப்பை போல இந்தியாவில் உள்ள எந்தக் கட்சிக்கும் கட்டமைப்பு கிடையாது. எங்களால் தான் பிரசாந்த் கிஷோர் வெற்றி பெற்றார். நாங்கள் தான் வெற்றி பெற்றுள்ளோம். அவர் எங்களுக்கு வியூக வகுப்பாளராக இருந்திருக்கிறாரே தவிர எங்களுடைய களப் பணி தான் வெற்றி பெற்றுள்ளது. இதுவே அவர் பா.ஜ.க.வுக்கு சென்று பணியாற்ற முடியாது வேறு எந்த கட்சிக்கும் சென்று பணியாற்றி வெற்றியைக் காட்ட முடியாது. தி.மு.க. கட்டமைப்பு வலுவான ஒன்று. இந்தியாவிலேயே வலுவாக இருக்கக்கூடிய ஒரே இயக்கம் தி.மு.க. தான்.

விஜய் கட்சிக்கு 15 முதல் 20 சதவீதம் வாக்கு வங்கி இருப்பதாக எந்த வகையில் கூறுகிறார் என்பது பிரசாந்த் கிஷோருக்கு தான் தெரியும். சர்வேயில் 52 சதவீதம் எங்களுக்கு கொடுத்த பிறகு அங்கு இருக்கக்கூடிய மிச்சம் மீதி எல்லாம் பார்த்தால் 9 சதவீதம் மட்டும் தான் வருகிறது. அதில் இருக்கும் 9 சதவீதமும் நாம் தமிழருக்கு எவ்வளவு சதவீதம் கொடுக்கப் போகிறார்கள். மற்றவர்களுக்கு என்ன கொடுக்கப் போகிறார்கள் எல்லாவற்றையும் பார்த்தோமேயானால் மிஞ்சுவது அஞ்சு சதவீதத்திலிருந்து ஏழு சதவீதம் மிஞ்சினால் பெரிது இதுதான் இன்றைய அர்த்தம் மேட்டிக்.

**புரட்சிகரமான திட்டங்கள்!**

நாடாளுமன்றத் தேர்தல் வாக்கு சதவீதத்திற்கும் சட்டமன்றத் தேர்தல் வாக்கு சதவீதத்திற்கும் மிகப் பெரிய வித்தியாசம் என்பது ஏற்படாது. எங்களுடைய 52 சதவீத வாக்கு வங்கி அப்படியே இருக்கும். வேண்டுமென்றால் பா.ஜ.க. கூட்டணியுடைய வாக்குகள் வேற கூட்டணிக்கு செல்லுமே தவிர எங்களுடைய வாக்கு வங்கி வேறு எந்தக் கட்சிக்கும் போவதற்கான வாய்ப்பு இல்லை. ஏனென்றால் தமிழ்நாடு முதலமைச்சர் மக்கள் நலத்திட்டங்களைமுன்னெடுத்துச் சென்று இருக்கிறார். இது போன்ற புரட்சிகரமான திட்டங்கள் இந்தியாவிலேயே வேற எந்த மாநிலத்திலும் செயல்படுத்தியது இல்லை. அத்தனை திட்டங்களும் முன்னோடி திட்டங்கள் மக்களுக்கான திட்டங்கள் அதை முதன் முதலாக நிறைவேற்றி இருக்கும் அரசு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு.

பெண்களைப் பின் தொடர்ந்து சென்றாலே மூன்றிலிருந்து ஐந்து வருடம் தண்டனை என்று சட்டத்தை போட்டு இருக்கக்கூடிய ஆட்சிதான் தி.மு.க.வின் ஆட்சி. இன்றைக்கு இந்த ஆட்சியில் அதிகமான பாதுகாப்பு இருக்கின்ற காரணத்தினால் தான் பெண்கள் தைரியமாக புகார் கொடுக்க முன் வருகிறார்கள். கடந்த ஆட்சியில் தங்களுக்கு ஒரு பாதிப்பு என்றாலும் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள். பெண்களுக்கு உரிய பாதுகாப்பு நம்பிக்கையை நாங்கள் கொடுத்து இருக்கின்றோம். பெண்கள் தைரியமாக வந்து புகார் கொடுப்பதால் தான் அந்தப் புகாரின் கீழ் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

ஒரு ஆசிரியர் தவறு செய்தால் அந்த ஆசிரியர் எப்படி மாணவர்களுக்கு ஆசிரியராக தொடர முடியும். அதனால் தவறு செய்யும் ஆசிரியரின் கல்வி சான்றுகளை ரத்து செய்வதாக தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கூறியதில் எந்த தவறும் இருப்பதாக தெரியவில்லை.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.விற்கு வாக்கு சதவீதம் வருகிறதா என்று பார்ப்போம் அவர்களுக்கு தற்போது கொடுத்திருக்கும் வாக்கு சதவீதத்தை குறைப்பதற்கான நடவடிக்கையில் தான் நாங்கள் ஈடுபடுவோம்.

ஜாதி வாரி கணக்கெடுப்புக்கு ஒரு தெளிவான பதிலை நாங்கள் கூறிவிட்டோம். மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஒன்று. மக்கள் தொகை கணக்கெடுப்பின் விவரங்களை சேகரித்தால் தான் ஜாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்ள முடியும். மக்கள் தொகை கணக்கெடுப்பை எடுக்காத போது மாநில அரசு எடுக்கும் ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு அங்கீகாரம் கிடைக்காது. நீதிமன்ற த்திற்கு செல்கின்ற போது அது அடிபட்டு போகும். அதனால் தான் ஒன்றிய அரசை நாங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்போடு ஜாதி வாரி கணக்கெடுப்பையும் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். ஒன்றிய அரசு எடுக்க வேண்டியதுதானே அனைவரும் ஒன்றிய அரசை வற்புறுத்த வேண்டியதுதானே மாநில அரசை ஏன் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

சில மாநிலங்களில் ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுத்து இருந்தாலும் அது நடைமுறைக்கு வரவில்லை. எடுத்து வைத்துக் கொள்வதில் என்ன பிரயோஜனம்.

ஓ.பி.எஸ். மகன் கூறுவதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்தியாவில் நம்பர் ஒன் கட்சியாக தி.மு.க. தான் உள்ளது.

செங்கோட்டையன் தனது சொந்தக் கருத்தைத்தான் சொல்லி இருக்கிறாரே தவிர தி.மு.க. இதில் எந்த ப்ளேயும் பண்ண வேண்டிய அவசியம் கிடையாது. ஏற்கனவே அ.தி.மு.க.வின் கதை அங்கு முடிந்து விட்டது. நாங்கள் எந்த வித குட்டி கலாட்டாவும் பண்ண வேண்டிய அவசியம் கிடையாது.

தி.மு.க. கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முடியாது. வேல்முருகனுக்கு சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பை உருவாக்கித் தந்தவர் தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க. ஸ்டாலின். அவர் கூறும் கோரிக்கைகளுக்கெல்லாம் செவி கொடுத்து அதனை நிறைவேற்றி வருகின்றார். அதனால் முதலமைச்சருக்கு எதிராக எந்தவித கோளும் அடிக்க மாட்டார் என்று நாங்கள் நம்புகிறோம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

---

### வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்திய நில விவகாரம்:

# 40 ஆண்டு கால பிரச்சினைக்கு தீர்வு காண ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குழு!

## வீட்டு வசதித்துறை அமைச்சர் எஸ்.முத்துசாமி பேட்டி!

சென்னை, பிப். 17 -

வீட்டு வசதி வாரியத்தால் எடுக்கப்பட்ட நிலங்களின் உண்மை நிலை அறியாமல் அதை வாங்கி குடியிருப்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அந்த நிலத்தை விடு விப்பது தொடர்பாக ஆய்வு செய்ய ஓய்வுபெற்ற 2 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலைமையில் குழு அமைத்துள்ளதாகவும், இக்குழு அளிக்கும் பரிந்துரையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து, அமைச்சர் சு.முத்துசாமி தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

வீட்டு வசதிவாரியத்தின் சார்பில் 40 ஆண்டுகளுக்கு முன் இடங்கள் எடுக்கப்பட்டு, ஆரம்பகட்ட பணியாக அதற்கான நோட்டீஸ் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின் எந்த நடவடிக்கையும் அதில் எடுக்கப்படவில்லை. இதுகுறித்த மனுக்கள் வந்த போது, மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை சரி செய்ய முதல்வர் ஸ்டாலின் உத்தர விட்டார். எனவே, இந்த மாதிரியான பிரச்சினை உள்ள இடங்களை கண்டறிய வாரியத்தின் சார்பில் 16 இடங்களில் புகார் பெட்டிகளை வைத்து கோரிக்கைகள் பெறப்பட்டன. இதன் மீது வாரியமே இதில் நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்காது என்பதால், கமிட்டி அமைத்து பரிந்துரை பெற முடிவெடு க்கப்பட்டது.

இதுவரை நோட்டீஸ் கொடுத்து வீட்டு வசதி வாரியம் எடுத்துள்ள நிலங்கள் 5 வகையாக பிரிக்க ப்பட்டன. ஐந்து வகைகளில், முதல் இரண்டில் வாரியம் நோட்டீஸ் அளித்துள்ளதுடன், எந்த பணமும் கொடுக்காத அளவில் நிற்கிறது. அதில் நிலத்தை திருப்பிக் கொடுப்பதில் பிரச்சினை இல்லை என்பதால், நீதிமன்ற வழக்குகள் உள்ள இடத்தை ஒதுக்கிவிட்டு 1,500 ஏக்கர் அளவுக்கு உத்தரவு முதல்வரால் வழங்கப்பட்டது.

அதன்பின் தற்போது 1,800 ஏக்கர் நிலத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலம் குறித்து ஆய்வு நடைபெறுகிறது. 3 மற்றும் 4-ம் வகை நிலங்களை பொறுத்த வரை, வீட்டுவசதி வாரியம் அந்த நிலத்துக்கான தொகையை சில உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ளது. பெறாதவர்களுக்கு நீதிமன்றத்திலும், வருவாய்த்துறையிலும் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது.

ஆனாலும், 40 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்காததால், உண்மை நிலையை கூறாமல் அந்த இடங்களை உரிமையாளர்கள் பலருக்கு விற்றுள்ளனர். இதில் பிரச்சினை இருக்கிறது என்பதே தெரியாமல் அவர்கள் வாங்கியுள்ளனர். அவர்களுக்கும் பாதிப்பின்றி நிலத்தை விடுவிக்க 2 ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டு பணிகளை தொடங்கியுள்ளனர். ஏப்ரல் இறுதிக்குள் பரிந்துரைகள் பெறப்பட்டு அதன்பின், நடவடிக்கை எடுக் கப்படும். ஐந்தாவது வகையை பொறுத்த வரை, வீட்டுவசதி வாரியம் முழுமையாக நிலத்தை எடுத்து, அதில் ஒரு பகுதியை மேம்பாடு செய்துள்ள நிலையில் மீதமுள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். ஆக்கிரமித்தவர்களிடம் இடத்தை கோருவோம். அதில் அவர்கள் கட்டிடம் கட்டியிருக்கும் பட்சத்தில், இன்றைய தேதியில் வாரியம் விற்பதாக இருந்தால் என்ன தொகை அந்த இடத்துக்கு நிர்ணயிக்கப் படுமோ, அந்த தொகையை செலுத்தி எடுத்துக் கொள்ளலாம். அவர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதால் எந்த சலுகையும் கிடையாது. வீட்டுவசதி வாரிய இடங்களில் தளப்பரப்பு குறியீடு தொடர்பாக சீரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதி வாரியத்தால் வீடு விற்கப்பட்டு கிரய ப்பத்திரம் பெறாதவர்கள் குறித்து முதலமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலேயே இது போன்று புகார் எழுந்தவுடன் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கமிட்டி போட்டு அதன் அடிப்படையில் 95 சதவீதம் கிரயப்பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் 5 சதவீதம்நீதிமன்றவழக்குகளாலும், சரியான ஆவணங்கள் இல்லாததாலும், உரிமையாளர்கள் யார் என்பது கண்டறியப்படாததாலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

40 ஆண்டு கால பிரச்சினைக்கு நில உரிமையாளர்களுக்கு பாதிப்பின்றி நிலத்தை விடுவிக்க 2 ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு ஏப்ரல் மாதம் இறுதிக்குள் பரிந்துரையளிக்கும். அதனடி ப்படையில் 5000 ஏக்கர் நிலங்களை விடுவிப்பது குறித்து உத்தரவுகள் பிறப்பிக்கப்படும். எனவே, நில உரிமையாளர்கள் யாரும் சிபாரிசு தேடி அலைய வேண்டாம். உங்கள் நிலத்தை விடுவிப்பதற்கான தகவல் வீடு வந்து சேரும்.

இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி பேட்டியளித்தார்.

---




---

### கழக சட்டதிட்ட விதி : 18, 19 மற்றும் 31-ன்படி

# தலைமைக் கழக நிர்வாகிகள் நியமனம் !

## தலைமைக் கழக அறிவிப்பு

**தி.மு.க. சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு தலைவராக** திரு. **டி.பி.எம்.மைதீன்கான்** (பாளையங்கோட்டை, திருநெல்வேலி) அவர்களும்; சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திரு.**வி.ஜோசப்ராஜ்** அவர்கள், சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணைத் தலைவராகவும்; சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளராக திரு.**கே.அன்வர் அலி**, (100/எஃப்/6, 5வது கிராஸ், ராமலிங்க நகர், உறையூர், திருச்சி) அவர்களும்;

தி.மு.க. வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வேப்பூர் வி.எஸ்.பெரியசாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், திரு. **குன்னம் ராஜேந்திரன்** (பெரம்பலூர்) அவர்களும் மற்றும் திரு.**கே.வி.எஸ்.சீனிவாசன்** (கிருஷ்ணகிரி) அவர்களும் தி.மு.க. வர்த்தகர் அணி துணைச் செயலாளர்களாகவும்;

தி.மு.க. செய்தித் தொடர்பு துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட கோவை செல்வராஜ் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், திரு. **சூர்யா கிருஷ்ணமூர்த்தி** (சென்னை) அவர்கள், தி.மு.க. செய்தித் தொடர்பு துணைச் செயலாளராகவும்;

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட திருமதி தமிழ்பொன்னி அவர்களுக்குப் பதிலாக, **திவ்யா சத்தியராஜ்** அவர்களை தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளராகவும் மற்றும்

திரு.**பி.எம்.ஸ்ரீதர்** (செம்பனார்கோவில், மயிலாடுதுறை மாவட்டம்) மற்றும் திரு.**பா.ச.பிரபு** (மதுரை) ஆகியோர் தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்களாகவும்;

தி.மு.க. கொள்கைப் பரப்பு துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட பி.ஆர்.சுந்தரம் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், முனைவர் **வே.தமிழ்பிரியா** (சிவகங்கை மாவட்டம்) அவர்கள், தி.மு.க. கொள்கைப் பரப்பு துணைச் செயலாளராகவும்;

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் க.சுந்தரம் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் திரு. **மருதூர் ஏ.இராமலிங்கம்** அவர்கள் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராகவும்; திரு. **கொ.ரமேஷ்** (தருமபுரி) அவர்கள் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளராகவும்;

தி.மு.க. இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆர்எம்டி.ரவீந்திரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், திரு. **சௌமியன் வைத்தியநாதன்** (மயிலாடுதுறை), திரு.**ஜி.நாகநாதன்** (கிழக்கு தெரு, எஸ்.கொடிகுளம், பரமகுடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்) மற்றும் திரு.**வி.டி. கலைச்செல்வன்**, முன்னாள் எம்.எல்.ஏ., (விருத்தாசலம்) ஆகியோர் தி.மு.க. இலக்கிய அணி துணைச் செயலாளர்களாகவும்;

தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளராக திரு.**எம்.எஸ்.ஹரிபாபு**, பி.இ., (சென்னை)அவர்களும்;

தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட திண்டுக்கல் க.பொன்ராஜ் அவர்கள் ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக திரு.**ஜெ.இராமகிருஷ்ணன்** (சிவகங்கை) அவர்கள் தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளராகவும்;

தி.மு.க. தொண்டர் அணி துணைச் செயலாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட திருச்சி முத்துக்குமரன் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால் அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, திரு.**எஸ்.எம்.கே.அண்ணாதுரை** (நுங்கம்பாக்கம், சென்னை) அவர்களை, தி.மு.க. தொண்டர் அணி துணைச் செயலாளராகவும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 600 018.
நாள் : 15.02.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.